1972 மார்ச் 23

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்களில் காவிரியின் குறுக்கே பாலங்கள் திருச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, முசிரி குளித்தலை சாலையிலும், திருச்சி நகர ஊர் சாலைக்குள் இருக்கிற தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் திருச்சியிலிருந்து 194, 195 மைல் களில் இரண்டு பாலங்கள் கட்டுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

* 659 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்கோயில் தொகுதியிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்க கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் தொகுதியில் உள்ள மணல்மேடு நகரப் பஞ்சாயத்தையும், காட்டுமன்னார்குடி தொகுதி யிலுள்ள முட்டம் கிராமத்தையும் இணைக்கும் வகையில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்ட கீழத் தஞ்சை நெடுஞ்சாலைத் துறை, மூலமாக 75 லட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடுகளைத் தயார் செய்து அரசாங்கத் திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும முக்கியமானது. மணல்மேட்டிலிருந்து காட்டுமன்னார்குடி பகுதிக்கு செல்லவேண்டு மென்றால் 40 மைல், 50 மைல் சுற்றிப்போகவேண்டிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்தைக் கட்டித் தருவதறகு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் தம்முடைய கேள்வியிலேயே 75 லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள நிதிநிலையிலிருந்து இப்போதைக்கு அது ஏற்றுக்கொள்ள முடியாது. வருங்காலங்களில் அதை எதிர்பார்க்கலாம்.

சென்னை விமான நிலையம்

* 660 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை விமான நிலையத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர் களின் பெயர் சூட்டக்கோரி மத்திய அரசுக்குக் கடிதம எழுதப் பட்டதா ?

(இ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து நமது அரசுக்குக் கிடைத்த பதில் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

வைகை அணையிலுள்ள வனப்பொருள் களஞ்சியம்.

* 661 வினா.—திரு. நா. வெ. குருசாமி ; மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சா தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணை கான் இயல் பயிற்சிப் பள்ளியில் உள்ள வன அரும்பொருள் களஞ்சியத்தை (பாரஸ்ட் மியூசியம்) ஆண்டிப்பட்டி-வைகை அணை மெயின் சாலையில் நல்ல கட்டட வசதியுடன் அபிவிருத்திசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. நா, பா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, "தற்போது இருக்கும் 'பாரஸ்ட் மியூசியம' 'பாரஸ்ட் பயிற்சிப் பள்ளிக்கு' அருகில் இருககிறது. வைகை அணையைப் பார்க்க வருகிறவர்களுக்கு அது தெரிவதே இல்லை. நல்ல வசதிகளைக் கொண்டதாக ஆண்டிப்பட்டி வைகை அணை சாலையில் கட்டடம் ஒன்றைக் கட்டிக்கொடுத்து அங்கே அந்த மியூசியத்தை வைக்க அரசு தக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இப்போதே வைகை அணைக்கு வருகிற சுற்றுலா பயணிகள் அங்கு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நன்றாக விளம்பரம் செய்யலாம்.

Irrigation facilities in Nilgiris District

* 662 Q.—THIRU N. K. PALANISWAMY, THIRU K. N. KUMARASWAMY, THIRU N. KITTAPPA : will the Hon. Minister for Electricity be pleased to state whether any survey has been conducted for irrigation through Punnampuzha–Pandiyar Scheme in the Nilgiris District ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.